6

# வளர் தமிழ் ஆய்வு

Dr. C. சொர்ணலதா

பதிப்பாசிரியர்கள்

சி. மைக்கேல் சரோஜினி பாய்

ப. பத்மநாப பிள்ளை

வ. இராசரத்தினம்

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

2017

| | | |
|---|---|---|
| 38. | சு. சசிகலா<br>அன்பு நெறியில் பரமனை அடைந்த இரு வேடர்கள் | 178 |
| 39. | பா. சடையம்மாள் தேவி<br>அற இலக்கியங்களில் மாற்றுத் திறனாளிகள் | 183 |
| 40. | ந. சதீஷ்குமார்<br>களரி எனும் தமிழர் போர்க்கலை | 188 |
| 41. | ச.ஆ. சஜிதா<br>நீதிநூல்களில் அறக்கருத்துகள் | 193 |
| 42. | ஷே. சாகுல்ஹமீது<br>கற்றல் கற்பித்தலில் உள்ள சவால்களும் அதன் தீர்வுகளும் | 198 |
| 43. | தி. சாந்தி<br>வினைச்சொற்களின் இணைதிறன் | 203 |
| 44. | ந. சாரதாமணி<br>'மாணிக்கம்' புதினம் காட்டும் மீனவர்களின் வாழ்வியல் | 208 |
| 45. | க. சிந்தியா<br>நான்காம் நிலை வேளாளர்கள் | 212 |
| 46. | ரா. சிவராமன்<br>தமிழ் இசையும் பாட்டும் | 217 |
| 47. | பா. சிறியபுஸ்பம்<br>பட்டினப்பாலை உணர்த்தும் பண்டையத் தமிழரின் வாழ்க்கைமுறை | 222 |
| 48. | சி. சீத்தாலட்சுமி<br>நாகலிங்கமரம் சிறுகதையில் வரதட்சணை | 227 |
| 49. | ப. சுகப்பிரியா<br>விதுரன் தருமனின் தந்தையா? இதிகாச நாவல்களை முன்வைத்து | 232 |
| 50. | த. சுகன்யா<br>நிலக்கோட்டையில் உற்பத்தியாகும் உலோகக் கைவினைப் பொருட்கள் | 238 |
| 51. | ஏ. சுபா<br>சிலப்பதிகாரத்தில் சமுதாயச் சித்திரிப்பு | 242 |
| 52. | ஆ. சுப்பிரமணியன்<br>பாமாவின் மனுசி புதினத்தில் காணலாகும் பெண்களின் பிரச்சினைகள் - ஓர் ஆய்வு | 247 |
| 53. | ச.அ. சுஜா<br>கந்தர்வன் கதைகளின் கருவும் சிறப்பும் | 251 |
| 54. | அ. சுஜாதா ஜாய்ஸ்<br>அள்ளூர் நன்முல்லையார் பாடல்களில் பெண்ணியம் | 255 |
| 55. | ஸ்ரீ. சுஜி எஸ்தர் ராணி<br>தேம்பாவணி - இரட்சணிய யாத்திரீகம் - இயேசுகாவியம் ஓர் ஒப்பீடு | 259 |
| 56. | இரா. சுஜித்திராகிருஷ்ணகுமாரி<br>நற்றிணையில் நிலவியல் | 264 |
| 57. | வே.செடிப்பவுன்<br>மாங்காய்ப்பால் புதினம் முன்னிறுத்தும் இலட்சிய இளைஞர்கள் | 267 |
| 58. | செ. செந்தில்குமார்<br>பாலைத்திணை மக்களின் தொழில்கள் | 272 |
| 59. | இரா. செல்வமீனா<br>பெண்களுக்கான நாட்டுப்புற மருத்துவம் | 277 |
| 60. | செ. செல்வராணி<br>எட்டுத்தொகையில் நிலையாமை கோட்பாடு | 282 |
| 61. | சி. சொர்ணமாலா<br>புறப்பொருள் வெண்பாமாலையில் பெண்கள் | 287 |
| 62. | ஜே. சோபியா பாத்திமா<br>தபூசங்கர் கவிதைகளில் காதல் | 292 |

மனித வாழ்வு நிலையில்லாதது. மனிதன் ஒரு நாள் இறப்பது உறுதி. பலி கொடுக்கப்படும் ஆட்டைப் போன்று மனிதன் இறப்பது உண்மையென்பதை

"காவுதோறும் ..........................................

மடங்கல் உண்மை மாயாமொ அன்றோ".

[புற.நா.பா.366 அடிகள் : 21-22]

என்ற அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

உலகில் பிறந்த அனைவரும் இறந்து விடுவார் என்றும் இறப்பை வென்றவர் எவரும் இல்லை என்ற உயர்ந்த கருத்தை,

"எல்லார் புறனும் தான்கண்டு, உலகத்து
மன்பதைக்கு எல்லாம் தானாய்
தன்புறம் காண்போர்க் காண்புஅறி யாதே".

[புற.நா.பா.356 அடிகள் : 7-9]

என்னும் பாடல் அடிகள் வலியுறுத்துகின்றன.

உயிர் அழிந்துவிடும் அழியாமல் நிற்பது புகழ் ஒன்றே. பிறருக்கு கொடுத்து ஈகையால் எய்திய புகழ் ஒருவன் மேலுலகத்துக்கு சென்ற பின்பும் நிலைத்து நிற்கும். ஒருவன் செய்யும் பழியும் புகழும் நிலைபெற்று நிற்கும். ஆனால், யாக்கை நிலையில்லாதது என்பதால் பிறருக்கு கொடுத்து புகழை ஈட்ட வேண்டுமென

"களரி மருங்கின் கால்பெயர்ந்து ஆடி
ஈம விளக்கின் வெருவரப் பேரும்
வசையும் நிற்கும், இசையும் நிற்கும்".

[புற.நா.பா.359 அடிகள் : 6-10]

எனும் பாடல் அடிகள் தெளிவாக விளக்குகின்றன.

**முடிவுரை**

நிலையில்லாத உயிரின் மீது பற்று வைத்து துன்பத்திற்கு ஆளாகக்கூடாது என்ற கருத்தை சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்து கின்றன. யாக்கை நிலையில்லாதது. தாம் செய்யும் அறச்செயல களும் புகழும் மட்டுமே நிலையானது என்ற கருத்தை எட்டுத்தொகை பாடல்கள் வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட்பாடுகளையும், வாழ்வியல் உண்மைகளையும் பிரதிபலிக்கும் கண்ணாடி யாகவே கருதப்படுகிறது. எட்டுத்தொகை நூற்களில் நிலையாமை மனித நேயம் பற்றிய கருத்துக்கள் உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான கருத்துக்களாகும்.



# புறப்பொருள் வெண்பாமாலையில் பெண்கள்

செம்மொழியாகிய தமிழ்மொழியில் ஐவகை இலக்கணங்களைத் தனித்தும் தொகுத்தும் விளக்குகின்ற நூல்கள் பலவாகும். அவற்றுள்ளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கண வரையறை கொண்ட பிறமொழிகளுக்கு நடுவே மக்களின் வாழ்வியல் நெறிகளை விளக்கும் பொருள் இலக்கணத்தைச் சிறப்பிக்கும் மொழி தமிழ் மொழி மட்டுமே. பொருள் இலக்கணமானது அகம், புறம் என்னும் இரண்டு கூறுகளைக் கொண்டது. இவற்றுள் புறப்பொருள் இலக்கணத்தைப் பன்னிரண்டு பகுப்புகளில் விரிவாக விளக்கும் நூல் புறப்பொருள் வெண்பாமாலையாகும். ஐயனாரிதனாரால் இயற்றப்பட்ட இந்நூல் பண்டைக்காலப் போர், மன்னர்தம் கொடை, வீரம், புகழ், மன்னர் - வீரர் பெருமைகள் மட்டுமின்றி பெண்கள் குறித்த கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. அவ்வகையில் புறப்பொருள் வெண்பாமாலையில் காணலாகும் பெண்கள் குறித்த செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**களவும் கற்பும்**

திருமணத்திற்கு முந்தைய தலைவன் தலைவியின் காதல் வாழ்வைக் களவு என்றும் மனையறம் தொடங்கியபின் அமைகின்ற வாழ்வுச் செய்தியைக் கற்பு என்றும் முன்னோர் வகுத்தனர். அவ்வகையில் புறப்பொருள் வெண்பாமாலையில் பெண்களின் களவு வாழ்க்கைச் செய்திகளும் கற்பு வாழ்க்கைச் செய்திகளும் விரவிக்கிடக்கின்றன.

பெண்கள் திருமணம் ஆகும் முன்னரே காதல் புரிதல், காதலித்த ஆண்மகனுடன் சென்று வாழ்தல் ஆகிய நிகழ்வுகள் அன்றே வழக்கில் இருந்துள்ளன. கைக்கிளை, பெருந்திணை என்னும் துறைகளும் இதனை உறுதி செய்கின்றன. புறப்பொருள் வெண்பாமாலையிலும் தன்னை விரும்பாத தலைவனைப் பெண்ணொருத்தித் தழுவ விரும்பும் நிலையும் (பெருந்திணை), கடவுள் பெண்டிர் தன் இனம் சார்ந்த ஆண் கடவுளை விரும்பும் நிலையும் (கடவுள் மாட்டுக் கடவுள் பெண்டிர் நயந்த பக்கம்) ஒரு மானிடப் பெண் கடவுளை விரும்புதல் நிலையும் (கடவுள் மாட்ட மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்) காணப்படுகின்றன. தான் விரும்பும் தலைவனின் மாலையினைப் பெற விரும்பும் ஒரு பெண்ணின் காதல் நிலையைக் 'கைக்கிளை'த் துறை எடுத்தியம்புகிறது.

பெண்களின் கற்புநிலையும் இல்லாள் முல்லை, கற்பு முல்லை, முதின் முல்லை உள்ளிட்ட துறைகள் வழியாக விளக்கப்படுகின்றது. சங்ககாலத்தில் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் எனக் கருதப்பட்டனர்.

---

**முனைவர் சி. சொர்ணமாலா**

பாத்திமா கல்லூரி, மதுரை.